அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2022/2023

# தமிழ்

## ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 08** |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. ஆடற்கலை பற்றிக் கூறும் நூல்

☐ ஆத்திசூடி ☐ சிலப்பதிகாரம் ☐ கொன்றைவேந்தன்

2. உயர்திணைக்குரிய சொல்

☐ கல் ☐ முதியவர் ☐ முதலை

3. ஔவையார் இயற்றிய அறநூல்களுள் ஒன்று

☐ மூதுரை ☐ நாலடியார் ☐ திருக்குறள்

4. வினைச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ பாடல் ☐ புலவர் ☐ பாடினார்

5. உலகம் என்பதன் ஒத்தபொருட்சொல்

☐ நாடு ☐ வையகம் ☐ சிற்றூர்

6. மன உறுதி உள்ளவர்களிடம் நிலைத்து நிற்கும் நற்பண்பு

☐ பயம் ☐ நல்லொழுக்கம் ☐ பொறாமை

7. மாணவனுக்கு மாணவி போல சிறுவனுக்கு

☐ தலைவி ☐ சிறுமி ☐ பாடகி

8. பறந்தது என்பதன் எதிர்காலச் சொல்

☐ பறக்கும் ☐ பறந்தன ☐ பறக்கிறது

9. பள்ளம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ காடு ☐ மேடு ☐ இறக்கம்

10. சிலப்பதிகாரம் என்னும் இலக்கியத்தை இயற்றியவர்

☐ இளங்கோ அடிகள் ☐ பாரதியார் ☐ ஔவையார்

11. நான் விளையாட்டுப் போட்டியில்

☐ பங்குபற்றினோம் ☐ பங்குபற்றினேன் ☐ பங்குபற்றினான்

12. ஒரு சொல்லியத்தின் கருத்துத் தொடங்கும் இடம்

☐ பயனிலை ☐ எழுவாய் ☐ செயப்படுபொருள்

13. இருக்கிறன் என்ற பேச்சுவழக்குச் சொல்லின் எழுத்துவழக்கு வடிவம்

☐ இருக்கின்றோம் ☐ இருக்கிறாய் ☐ இருக்கிறேன்

14. பெற்றோர் என்னும் சொல் குறிப்பது

☐ ஆண்பால் ☐ பலவின் பால் ☐ பலர்பால்

15. ‘‘நெஞ்சு பொறுக்குதில்லையே’’ என்று வருந்திப் பாடியவர்

☐ மகாகவி பாரதியார் ☐ இளங்கோ அடிகள் ☐ ஔவையார்

(15 X 1 = 15 புள்ளிகள்)

## 2. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| கேட்டது | செய்வோம் | வாழ்கின்றன | ஓடியது | பூத்திருந்தன |

1. ஆற்றுநீர் சலசல என ______________________________.
2. காட்டில் விலங்குகளின் ஒலி ______________________________.
3. நாம் பிறருக்கு உதவி ______________________________.
4. தாமரைப் பூக்கள் குளத்தில் ______________________________.
5. உலகில் எண்ணற்ற உயிரினங்கள் ______________________________.

(5 X 1 = 5 புள்ளிகள்)

## 3. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

1. வானவில் ____________________________
2. உறைப்பு ____________________________
3. உறவினர் ____________________________
4. அங்காடி ____________________________
5. காடு ____________________________
6. அச்சம் ____________________________

(6 X 1 = 6 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.**

| மேலேமேலே | ஏறி இறங்கி | இரவுபகல் |
|---|---|---|
| கூட்டங்கூட்டமாக | கலகல | |

1. தம்பி படியில் __________________________ விளையாடினான்.
2. பருந்து __________________________ பறந்து சென்றது.
3. யானைகள் __________________________ ச் சென்றன.
4. தங்கை __________________________ எனச் சிரித்தாள்.
5. அப்பா எங்களுக்காக __________________________ பாராது உழைக்கிறார்.

(5 X 1 = 5 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. குழலி உடைகளை அடுக்கி வைத்தாள்.
2. அவர்கள் காட்டில் விலங்குகளைக் கண்டார்கள்.
3. சிறுவன் மரத்திலேறிப் பட்டத்தை எடுத்தான்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9 X 1 = 9 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழரது கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது எது?

2. குடிமக்கள் வாழ்க்கையைக் கதையாகக் கொண்ட இலக்கியம் எது?

3. பாரதியாருக்குத் தெரிந்த மொழிகளுள் இரண்டினை எழுதுக.

4. அ.்.றிணைக்குரிய எடுத்துக்காட்டுகள் இரண்டு எழுதுக.

5. புகார் நகரில் ஆடல் அரங்கேற்றம் நடைபெற்றது. இச்சொல்லியம் எக்காலத்தைக் காட்டுகிறது?

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் கலைகள்
2. பாரதியார்
3. எனது குடும்பம்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

உலகில் வாழும் உயிரினங்கள் தங்கள் அன்பைப் பலவகைகளில் வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் சிறந்தது நட்பு. நல்லவர்கள் தாம் வேறு தமது நண்பர்கள் வேறு என்ற வேறுபாடு இன்றிப் பழகுவார்கள். நண்பர்கள் உண்மையான நட்பைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும். அவ்வாறு நடந்தால் அவர்களது நட்பு நீடித்து நிற்கும். நண்பருக்கு ஏற்படும் துன்பத்தைப் போக்க முயற்சி செய்வதும் நண்பரது கடமையாகும். கவலையாக இருக்கும் நண்பருக்கு ஆறுதல் மொழிகள் கூறி, அவரது கவலையைப் போக்க வேண்டும். பேச்சோடு மட்டும் நின்றுவிடாமல், அவரை மகிழ்விக்கும் வகையில் செயலாற்றுவதும் உண்மையான நட்பாகும்.

1. அன்பை வெளிப்படுத்தும் வகைகளுள் எது சிறந்தது?

2. நட்பு நீடிக்க எதைக் கடைப்பிடிக்க வேண்டும்?

3. தாம் வேறு தமது நண்பர்கள் வேறு என்ற வேறுபாடு இன்றிப் பழகுவோர் யாவர்?

4. நண்பரது கவலையைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

5. ஒரு நண்பரது கடமை என்ன?

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள நாளுக்கான திட்டமிடலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

வளவன் ஐந்தாம் ஆண்டில் படிக்கும் மாணவன்.
அவனது ஒரு நாளுக்கான திட்டமிடலில் இருந்து...

- 06:35 மணி - உறக்கம் விட்டு எழுதல்
- 07:00 மணி - காலை உணவு உண்ணுதல்
- 07:45 மணி - பள்ளிக்குச் செல்லுதல்
- 08:45 மணி - விருப்பமான கணித பாடம் படித்தல்
- 11:15 மணி - இடைவேளை
- 14:15 மணி - பள்ளி விட்டு வீட்டுக்குச் செல்லுதல்
- 15:30 மணி - நீச்சல் வகுப்புக்குச் செல்லுதல்
- 19:00 மணி - மாலை உணவு உண்ணுதல்
- 20:00 மணி - படுக்கைக்குச் செல்லுதல்

1. வளவன் 07:45 மணிக்கு பள்ளிக்குச் செல்வான். (    )
2. இடைவேளை 11:30 மணிக்குத் தொடங்குகின்றது (    )
3. வளவனுக்கு விருப்பமான பாடம் கணிதம். (    )
4. வளவன் 19:00 மணிக்கு மாலை உணவு உண்பான். (    )
5. உதைபந்தாட்ட வகுப்புக்கு 15:30 மணிக்குச் செல்வான். (    )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 09 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தப் புள்ளிகள் | | | |